**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 90/2022 PW . 3**

Name : முருகேசன் Fathers Name : ராமன்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது காரைக்குடியில் வசித்து தனியாக தொழில் செய்து வருகிறேன். 2011ம் வருடம் செப்டம்பர் மாதம், தேதி நினைவு இல்லை மதியம் சுமார் 2 மணிக்கு குன்றக்குடியில் இருந்து வேலையை முடித்துவிட்டு நானும், நாகராஜ் என்பவரும், அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் காரைக்குடி நோக்கி வந்துகொண்டிருந்தோம். கோவிலூரை தாண்டியவுடன் பழைய பேருந்துநிலையத்திற்கு சுமார் அரை கி.மீட்டர் முன்பாக வல்கனேசிங் கடை பக்கத்தில் எங்களுக்கு முன்னால் ஒருவர் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். எதிரே சீட்டர்வேன் வேகமாக வந்து எங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த நபர் மீது மோதியது. அவர் கீழே விழுந்துகிடந்தார். நாங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அருகே சென்று பார்த்தபோது அவருக்கு கை, கால்களில் காயம் இருந்தது. காயம்பட்டவரின் சட்டப்பையில் இருந்து அவரது போனை எடுத்து என்னுடன் வந்த நாகராஜ் என்பவர் தகவல் சொன்னார். காயம்பட்டவரின் மனைவிக்கு தகவல் சொன்னதாக சொன்னார். கூட்டம் சேர்ந்துவிட்டது. சிறிதுநேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து அவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டார்கள். சிறிதுநேரத்தில் அவர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. சிறிதுநாட்கள் கழித்து இந்த விபத்து பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

விபத்து நடந்த அன்று போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நாகராஜனை விசாரித்தார்களா என்று தெரியாது. ஆனால் அவர் சொல்லிதான் போலீசார் அவரை விசாரித்ததாக தெரியும். நான் சென்ற இருசக்கர வாகனம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. எதிரே வந்த சீட்டர்வேன் பதிவு எண் போன்ற விபரங்கள் எனக்கு தெரியாது. விபத்துக்குள்ளான இருசக்கர வாகனம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. சீட்டர்வேனில் பயணிகள் இருந்தார்களா என்பது எனக்கு தெரியாது, விபத்தில் இருசக்கர வாகனத்திற்கும்,

வேனுக்கும் எந்த பகுதியில் சேதம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இரு வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதிகொண்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் மது அருந்தியிருந்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. வேனில் எந்த பாகம் இருசக்கர வாகனத்தின் எந்த பாகத்தின் மீது மோதியது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. எந்த போன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று தெரியாது. சம்பவ சாலை இரு பேருந்துகள் செல்லக்கூடிய அகலமான தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்தின்போது சம்பவ சாலையில் இருபுறமும் கடைகள் அதிகமாக இருந்தது என்றும், மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் சீட்டர்வேனுக்கு எதிர்புறம் நான்கு சக்கர வாகனம் ஏதும் வந்ததா என்றால் இல்லை. விபத்துக்குள்ளான நபரை எனக்கு விபத்துக்கு முன்பு தெரியாது. இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 90/2022 PW . 4**

Name : தங்கராஜ் Fathers Name : கோவிந்தன்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது காரைக்குடியில் ரயில்வே ஸ்டேஷனில் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். எனது வீடு லட்சுமிநகரில் உள்ளது. 2011ம் ஆண்டு மாதம், தேதி நினைவு இல்லை மாலை 5 மணிக்கு பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள வல்கனைசிங் கடை அருகே நானும் எனது நண்பர் ஆறுமுகம் என்பவரும் ஆட்டோவில் வந்துகொண்டிருந்தபோது குன்றக்குடி காவல் நிலையத்தினர் அந்த இடத்தில் சமீபத்தில் நடந்த சாலை விபத்து சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். அதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த விபரத்திற்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படுவது பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகஜர் அதசாஆ. 2. இது சம்பந்தமாக போலீசார் ஏ்ன்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

அன்றையதினம் போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்த பேப்பரில் எழுதியிருந்த முழு விபரமும் தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை: இல்லை